மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1:25

# ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 28 ஸபர் 9 இதழ் 246
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-10-1986

“ஷெல்” தாக்குதலின் எதிரொலி: யாழ். ஆஸ்பத்திரி

## நடவடிக்கைகளை குறைக்க ஊழியர் தீர்மானம்

[அலுவலக நிருபர்]

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்படும் ‘ஷெல்’ யாழ் ஆஸ்பத்திரி மீது வீழ்ந்து தாக்குவதால் பாதுகாப்புக்கருதி வைத்தியசாலை நடவடிக்கைகளை, குறிப்பாக அவசரசிகிச்சை, அவசரசத்திர சிகிச்சைபோன்றவை ள் தவிர ஏனையவற்றைப் படிப்படியாக குறைப்பதென சகல ஊழியர்களும் கூடி முடிவெடுத்துள்ளனர்

யாழ் ஆஸ்பத்திரி கூட்ட மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து அண்மைக் காலங்களாக ஏவிவிடப்படும் ஷெல்கள் யாழ். ஆஸ்பத்திரி வளவுக்குள் பலதடவைகள் வீழ்ந்து வெடித்துள்ளதும், இதனால் சிறுவர் சிகிச்சை நிலையம் உட்பட சில கட்டடங்கள் சேதமடைந்ததும் நோயாளர் பலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

ஆஸ்பத்திரி மீதான தாக்குதல்களை ஆட்சேபித்து வைத்திய நிபுணர்கள் உள்ளிட்டு சகல ஊழியர்களும் கடந்த மாதம் கண்டன

(5ம் பக்கம் பார்க்க)


தளபதி விக்டர்

வீரமரணமெய்திய தளபதி

## விக்டருக்கும், றேமுக்கும் கண்ணீர் அஞ்சலி, வீர வணக்கம்

அலுவலக நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிப் படையின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளரும், தளபதிகளுள் ஒருவருமாகிய விக்டர், சகமலப்டினன்ட் றேம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ் குடாநாட்டின் வீதிகள் தோறும் நேற்று மகர தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. யாழ் நகரில் சோக கீதம் இசைக்கப்பட்டது.

மறைந்த மன்னார் தளபதி விக்டரின் பூதவுடல் யாழ். நகரிலுள்ள புலிப் படையின் பிரதான முகாம் ஒன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

ஆண்கள், பெண்கள், மாணவர்கள் உட்படப் பெருந்தொகையானோர் நீண்ட கியூவில் நின்று தளபதியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர். மலர்வளையங்களும் வைக்கப்பட்டன.

புலிப்படையினரும் ஆயுதபாணிகளாக கியூவில்நின்று அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் முகாமிலிருந்து பூதவுடல் வாகனமொன்றில் வைக்கப்பட்டு முன்செல்ல அதனைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டு புலிப்படைத் தள

[5-ம் பக்கம் பார்க்க]

# ● அடம்பனில் புலிகளால்கொல்லப்பட்ட 16 சிப்பாய்களின் சடலங்கள் இன்று யாழ். நகர்வந்துசேரும்

## கைதான இரு படையினருடன் ஆயுதங்களும் எடுத்துவரப்படும்

(நமது நிருபர்)

**மன்னார் அடம்பனில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிப் படையின் கெரில்லா அணியினருக்குமிடையில் நடைபெற்ற நேரடிச் சமரின்போது புலிப்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிப்பாய்கள் இன்று யாழ். நகருக்கு கொண்டுவரப்படவுள்ளனர். இவர்களுடன், போரில் கொல்லப்பட்ட 16 சிப்பாய்களின் சடலங்களும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் மக்களின் பார்வைக்கு வைப்பதற்காகக் கொண்டுவரப்படும்.**

மன்னார் தள்ளாடி ராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் (12ம்திகதி) 200க்குமேற்பட்ட இராணுவத்தினர் அடம்பன் கிராமத்தை முற்றுகையிடச் சென்றனர். அச்சமயம் தமிழீழ விடுதலைப் புலிப்படையின் கெரில்லா அணியினர் இராணுவத்தினரை எதிர்த்துத் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்குமிடையே கடும் சண்டைமூண்டது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் 16 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

மன்னார் மாவட்ட பொறுப்பாளரும், மத்திய குழு உறுப்பினருமாகிய லெப்டினன்ட் கேர்ணல் விக்டர் (மருசலீன் பியூஸ்லஸ் - மன்னார்), 2வது லெப்டினன்ட் றேம் (செல்லையா செல்வம் - மன்னார் ஆகிய இருவரும் விடுதலைப்புலிகள் தரப்பில் பலியானார்கள்

மேலும் இத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட 16 இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் தம்மால் கைப்பறறப் பட்டுள்ளதாகவும்

[5ம் பக்கம் பார்க்க]

அறிவித்தல்
(பெயர் மாற்றம்)
கடந்த பல காலங்களாக
Intersun Group
என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை
மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 8-10-1986
(புதன்கிழமை) தொடக்கம்
GLORIA TRAVELS
என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை
சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.
[A-1441]

## ஹர்த்தால் வேண்டாம்

[நமது நிருபர்]

மறைந்த விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதி, லெப்டினன்ட் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக யாழ நகரில் ஹர்த்தாலோ அல்லது கடையடைப்போ மேற்கொள்ளவேண்டாமென்றும், பொதுமக்கள், வர்த்தகர்கள் தமது துயரத்தைக் கறுப்புக்கொடி, தோரணங்கள் கட்டுவதன்மூலம் காட்டிக் கொள்ளலாமெனத் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

## தலையாட்டி இராணுவ சிப்பாயையும் விட்டுவைக்கவில்லை

யாழ்ப்பாணம், செவ்.

வவனியா இராணுவத்தினரால் ஈடுபடுத்தப்பட்டு, வவனியா நகரத்தில்வைத்து வருவோர் போவோரைப் பார்த்துத் ‘தலையாட்டி’வந்த மூகமூடி மனிதரொருவர் சாதாரண உடையில்வந்த இராணுவ சிப்பாய் ஒருவரையும் பார்த்துத் தலையாட்டியதால் குறிப்பிட்ட தலையாட்டி இராணுவத்தால் தாக்கப்பட்டார்.

வவனியா நகர் நோக்கிவந்த நபர்களை முகமூடி மனிதர் முன்னிலையில் நிறுத்திப் பரிசோத

[5ம் பக்கம் பார்க்க]

## சிலிண்டர் தாக்குதல் நாலு படையினர் பலி -தமிழீழ இராணுவம்

யாழ்ப்பாணம், திங்கள்.

“ஒட்டுசுட்டான் முகாமிலிருந்து கடந்த 12ம் திகதி ரோந்துவந்த ராணுவத்தினர் மீது புதுக்குடியிருப்பு றோட் சுடலைக்காட்டருகில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட சிலிண்டர் கண்ணிவெடித் தாக்குதலினால் ஒரு ஜீப் முற்றாகச் சேத

[5ம் பக்கம் பார்க்க]

★ இலங்கைக்கு அமெரிக்க இராணுவ உதவி:

## ஆச்சரியப்படத்தக்க ஒரு நிகழ்வு அல்ல

கொழும்பு, திங்கள்.

இலங்கைக்கு ‘பயங்கரவாத ஒழிப்புக்கு’ என்ற போர்வையில் ராணுவ உதவியை வழங்க அமெரிக்கா தீர்மானித்திருக்கும் விடயம் பெரிதும் ஆச்சரியப்படத்தக்க நிகழ்வல்ல என மேற்கத்தைய ராஜதந்திர வட்டாரங்கள் கருதுகின்றன.

இலங்கைக்கு ராணுவ உதவியைப் பகிரங்கமாக வழங்க அமெரிக்கா இப்போதுதான்

[5ம் பக்கம் பார்க்க]

## குண்டுவீச்சு

[நமது நிருபர்]

துணுக்காயிலிருந்து நேற்றுப் பிற்பகல் நெல்மூடைகளை ஏற்றிவந்த மூன்று லொறிகள்மீது குண்டுவீச்சு விமானமொன்று குண்டு வீசித்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

75 இனத்திற்கு மேற்பட்ட குரோட்டன்கன்றுகள் பொலித்தீன், பைகளிலும், சாடிகளுடனும் விற்பனைக்குண்டு 78/2, New No 152/2, கோவில்வீதி, யாழ்ப்பாணம். (C 5153)

நல்ல நிலையிலுள்ள Honda CG-1'5 (Deluxe) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: J. ஜெகதீசன், 13'/4, பருத்தித்துறை வீதி, நல்லூர் நூல்நிலைய அருகாமையிலுள்ள ஒழுங்கை. (C 5190)

கால் நடைகளுக்கு உகந்த விஷேச ''மினரல் மிக்சர் கல்சியப் பவுடர்'' மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M G M . 777, K K S Road and 208, Ist Cross St. Jaffna T. P. 22611. (C 5073)

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது. சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

தேக்கு அல்மாரி, கட்டில்கள், Foam மெத்தைகள், Show case, Formica சாப்பாட்டு மேசைகள், Baby cot, Dinner set, கிளாஸ், பீங்கான், சில்வர், Sanyo 5 Speaker கசற் றேடியோ, Box Speakers, National T. V கசற் றேடியோவுடன், பெல்ஜியம் முகம் பார்க்கும் கண்ணாடிகள், Singer மெஷின், மற்றும் பல உடன் விற்பனைக்கு 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம், St. Charles பாடசாலை அருகில். (C-5141]

பெரிய அளவிலான செப்பு பித்தளை, அலுமினியக்கிடாரம், வெங்கல அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, பூச்சாடி, மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், ஸ்தூபி, வேல், சூலம், செண்டி, தூக்குவிளக்கு, சருவக்குடம், பொங்கல் சருவம், கும்பச்செம்பு, நிறைகுடம் செட், யப்பான்- இந்திய றேவகைகள், எவர்சில்வர், அன்பளிப்பு பாவனைப் பொருட்கள் மற்றும் C 50 ஹொண்டா, C 50 ஹொண்டா Chaly மோட்டார் சைக்கிள்களும். தொடர்பு: ஸம்ஸ், 26B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 5186]

### தேவை

பிரயாண முகவர் நிலையமொன்றுக்கு பெண் வரவேற்பாளர்கள் தேவை. ஆங்கிலம் சரளமாகப் பேசுபவராயும், சுருக்கெழுத்து, தட்டெழுத்து செய்வதில் கல்விச் சான்றிதழ்களும் பெற்றுள்ளவரும், வயது 22 30 வரை இருப்பதும் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவு திகதி 20-10-86 விளம்பர இல A-1455 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். [A-1455]

### தமிழ் மொழித் தினம்

உடுவில், திங்கள் மானிப்பாய் கல்வி வட்டாரத்தில் தமிழ் மொழித்தினம் இன்றிலிருந்து 16ம் திகதி வரை நடைபெறவுள்ளது. ஏழாலை மகாவித்தியாலயத்

[7ம் பக்கம் பார்க்க]

## வகுப்புகள்

87-ம், 88-ம் ஆண்டிற்கான G C.E. A/L வகுப்புகள் 16-10-86 ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு; S. அருள்நங்கை 73, உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். C 1425

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

T V Radio Electronic Engineering. மோட்டர் வைண்டிங் மோட்டர்மெக்கானிசம், வெல்டிங், வயறிங், தட்டெழுத்து - சுருக்கெழுத்து பிரிவுகள் 18-10-86 ஆரம்பமாகவுள்ளன. விரும்பியோர் தொடர்பு கொள்க. Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [C-5,84]

Spoken English புதிய பிரிவு தூர இடங்களில் இருந்து வருபவருக்காக பகல் நேர இரு மணித்தியால வகுப்பு வாரத்தில் இரு நாட்கள். ஆரம்பம் 16-10-86. நேரம்: காலை 9- 1 மணி வரை. 12, வைமன் வீதி, நல்லூர். S.B. Iyar (C 5182)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஆயிலியம் நட்சத்திரமுடைய லண்டனில் கணக்காளராகப் பணியாற்றும் பெண்ணுக்கு மணமகன் தேவை. லண்டனில் பணியாற்றுவோர் சாதகக் குறிப்போடு விண்ணப்பிக்கவும் சீதனம் கொடுக்கப்படும் விபரங்களுக்கு: விளம்பர இல C 5169' C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 5169)

## தவறிவிட்டது

இல. 590942626V சி. கிருபாகரன் சிவன்கோவிலடி, வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை என்பவருடைய அடையாள அட்டையும் சீநோர் காரியாலய அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: சீநோர் வலைத்தொழிற்சாலை, குருநகர் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 5193)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### பயிற்சிகள் நாளை ஆரம்பம்

1. City and Guilds London Examination Part I and Part II.
2. வயறிங் பயிற்சி.
3. மோட்டர் றீ வைண்டிங் பயிற்சி.

**ஒமேகா,** மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஈழநாட்டிற்கு எதிரில்) [A 1399]

### பிரயாண ஒழுங்குகள்
## அவசர தேவை

★ சவூதி அரேபியா ★ லிபியா

(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
5 வருட அனுபவத்துடன்
வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்
பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.
உடன் பாஸ்போட், 20 படம்
மற்றும்
லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**யூனிவேசல்** ஏஜென்சி
125, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
(பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)
(A 1393)

### பரிசு பெற்றார்

காங்கேசன்துறை. திங் விலங்குகளுக்கு இம்சை விளைவிப்பதைத் தடுக்கும் சங்கம் நடத்திய அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி மாணவன் இரா. பிரபாமுகுந்தன் இரண்டாம் பரிசைப் பெற்றுக் கொண்டார்.

மேற்படி சங்கத்தினால் பரிசு பெற்றவருக்கு அனுப்பப்பட்ட 250 ரூபாவுக்குரிய காசுக்கட்டளையை அதிபர் கல்லூரிக்கட்டடத்தில் வைத்து இம்மாணவனுக்கு வழங்கினார்.

### பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா ★ லிபியா

ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
5 வருட அனுபவத்துடன். வயது: 25 44 வரை
★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்
★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். உடன் பாஸ்போட், 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]

### பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

செல்லவிருக்கும் குறூப்பில் சேரவிரும்புபவர்கள் உடன் கடவுச் சீட்டுடன் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்

★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி அழைத்துச் செல்லவுள்ளார்.

தொடர்புகொள்ளவும்:

**லிப்ருஸ் லிமிட்ரெட்,**
R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(A-1397)

### பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள். மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்: 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-
**N. Bala**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

பஸ் இல. 764,
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1395]

உலகச் செய்திகள்

ஆயுதக்கட்டுப்பாடு குறித்து

# அமெரிக்க - சோவியத் சந்திப்பு உடன்பாடு எதுவுமின்றி முடிவு

றெய்க்ஜாவிக், ஒக்டோபர் 13

**ஆயுதக்கட்டுப்பாடுகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு றெனுல்ட் றேகனுக்கும் சோவியத் தலைவர் திரு. மிகைல் கொர்பச்சேவிற்குமிடையே நடைபெற்ற உச்சிமாநாடு உடன்பாடு எதுவும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது.**

'ஸ்ரார்வார்' என்னும் அமெரிக்க இராணுவத்துறைப் பாதுகாப்பு முன் முயற்சி குறித்து தோன்றிய சர்ச்சையையடுத்து அந்தப் பேச்சுக்கள் கைவிடப்பட்டன.

ஐஸ்லந்த் தலைநகர் றெய்க்ஜாவிக்கில் தாங்கள் நடத்திய பதினொரு மணிநேரப் பேச்சுக்களின்போது திரு. றேகன், கொர்பச்சேவ் ஆகிய இருவருமே ஆயுதக்கட்டுப்பாடு குறித்த உடன்பாடு ஒன்றை எட்டுவதில் கணிசமான முன்னேற்றம் கண்டதாய் இருதரப்புகளும் தெரிவித்திருந்தன. ஆனால் திரு றேகனின் விண்வெளிப்போராயுதவசதித் திட்டம்தான் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த உடன்பாடு ஒன்றிற்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது.

## றேகன்-கொர்பச்சேவ் கருத்து

இந்த உச்சிமாநாட்டின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கொர்ப்பசேவ் இந்தப் பிரச்சினையில் நிலவிய அதிபர் றேகனின் கருத்துத்தான் உச்சிமாநாட்டின் பேச்சுக்கள் தோல்வியடைவதற்கு முக்கிய காரணம் என்று தெரிவித்தார்.

இதேவேளை தாம் முன்வந்து அளித்த யோசனையை திரு கொர்பச்சேவ் நிராகரித்ததாக திரு. றேகன் தெரிவித்தார்.

உடன்பாடு எதனையும் எட்டாமலும் திரு கொர்ப்பசேவ் வாஷிங்டன் செல்வதற்கான தேதி எதுவும் நிர்ணயிக்கப்படாமலுமே ஐஸ்லந் கூட்டம் முடிவுபெற்றதாக அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு ஜோர்ஜ்ஜுல்ஸ்தெரிவித்தார். (ஒ)

# "இந்திய உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுகிறது"

## ராஜீவ் குற்றச்சாட்டு

புதுடில்லி. ஒக். 13

இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவது இந்திய பாகிஸ்தான் உறவுகளைப் பாதித்துள்ளது என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கூறியிருக்கிறார்.

புதுடில்லியில் இந்தோனேஷியப் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்திய எல்லைக்கப்பாலிருந்து பயங்கரவாதிகளுக்குப் பயிற்சியளிப்பதன்மூலம் இந்த நாட்டு விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுகிறது. பயங்கரவாதிகளுக்கு பாகிஸ்தான் பயிற்சியளித்து உதவி வருகிறது என்பதனை நிரூபிக்க தம்மிடம் நல்ல சான்றுகள் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தவிடயம் சம்பந்தமாக அதிபர் ஸியாவின் கவனத்திற்கு தாம் கொண்டுவந்திருந்தபோதும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானின் அணுஆயுத திட்டம்பற்றி திரு. காந்தி குறிப்பிடுகையில் இஸ்லாமாபாத் அணுகுண்டைத் தயாரிக்கும்நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்பதுதான் இந்தியின் தற்போதைய மதிப்பீடாகும் என்று தெரிவித்தார். (ஒ)

ஆபிரிக்க முன்னரங்க நாடுகளின்——

# ஆறு தலைவர்கள் பிராந்திய பாதுகாப்புபற்றி ஆலோசனை

## பிறிட்டோரியாமீது தாக்குதல் அதிகரிக்கிறது

லண்டன், ஒக். 13

தென்னாபிரிக்க முன்னரங்க நாடுகளின் ஆறு தலைவர்கள் பிராந்திய பாதுகாப்புப்பற்றி பரிசீலனைசெய்யும்பொருட்டு மொஸாம்பிக்கில் ஒருநாள் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்கள்.

தென்னாபிரிக்கா மொஸாம்பிக் அதிபர் ஸாமோராமக்லின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு திட்டமிட்டுவருவதாக மொஸாம்பிக் குற்றம்சாட்டியிருப்பதனையடுத்து இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தை தொடக்கிவைத்துப் பேசிய சாம்பியா அதிபர் திரு. கென்னத் கவுண்டா தென்னாபிரிக்க நிலைமை சீர்குலைந்துவருவதற்கு மொஸாம்பிக்தான் பொறுப்பு என்று கூறுவது தவறு என்று கூறினார்.

உலகின் அனைத்துப்பகுதிகளில் இருந்தும் இனவெறி கொண்ட பிறிட்டோரியா ஆட்சி மீது நெருக்குதல்கள் அதிகமாகி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஹராரேயில் நடைபெற்ற மண்டலசார்பற்ற மாநாடு வெற்றிபெற்றதையடுத்து இனஒதுக்கலுக்கு எதிரான போராட்டம் முன்னரங்க நாடுகளுக்கு சாதகமாக முன்னேறியுள்ளதென்றும் அவர் கூறினார்.

இதேவேளை தென்னாபிரிக்காவில் நிலக்கண்ணவெடி ஒன்று வெடித்து சில சிப்பாய்கள் காயமுற்றதற்கு மொஸாம்பிக்தான் பொறுப்பு என்று தென்னாபிரிக்கா கடந்தவாரம் குற்றஞ்சாட்டியிருந்தது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க மொஸாம்பிக் மற்றும் ஸிம்பாவ்வே எல்லைப்பிரதேசங்கள் நெடுகிலும் தென்னாபிரிக்கா தனது படைகளைப் பெருக்கி வருவதன்மூலம் முன்னரங்க ஆபிரிக்க நாடுகளுக்கு எதிராக போர் ஒன்றிற்கு ஆயத்தம்செய்துவருகிறது என்று ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளார்கள். (ஒ)


திறமையான அசொக் லேலண்ட்
உதிரிப்பாகங்கள் உபயோகிப்பதினுல்
உங்கள் லங்கா அசோக்லேலண்ட்
வாகனம் மிக நன்ருக ஓடுகின்றது.

விலை ரூ. 25/- முதல்

லங்கா அசோக் லேலண்ட சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனுகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592


எரியூட்டும் குண்டிலிருந்து பாதுகாப்பு——

# தீயைக் கட்டுப்படுத்தும் வழிவகைகள்

ஒரு கட்டிடமொன்றில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்க வேண்டுமானல முதலில் எங்கிருந்து அணைக்கத் தொடங்குவது என்பதை நிச்சயித்துக் கொள்ளவேண்டும். அதற்கு அக்கட்டிடத்தின் எப்பகுதியில் இருந்து தீ பிறப்பிக்கப்படுகின்றது என்பதையோ அல்லது எப்பகுதியில் உடனடியாக அணைக்கவேண்டிய அளவு பாரதூரமாக தீ பரவி இருக்கிறது என்பதையோ அறிந்து அவ்விடத்தில் இருந்தே தீ அணைப்பினை ஆரம்பிக்கவேண்டும் அறையொன்றினுள் தீப்பற்றியிருப்பின் அதனுள் அநாவசியமாக உள்நுழைவது விரும்பத்தக்கதல்ல. தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குத்தேவையான நீர், மணல் என்பனவும், தேவையான கருவிகள், பொருட்கள் அனைத்தும் தயாராக இருக்கும் பட்சத்திலேயே உள்நுழைய வேண்டும் அறையொன்றினுள் பற்றிய தீயை அணைத்துவிட்டு அடுத்த இடத்துக்கு நகரும்போது சில வேளைகளில் முன்னைய இடத்தில் மீண்டும் தீப்பற்றக்கூடிய சாத்தியம் இருப்பதாலேயே பரவலாக நீரை விசிறி தீயைக்கட்டுப்படுத்திய பின்னரோ முற்ருக அணைக்க முயலவேண்டும். அத்துடன் தீயை அணைக்க முயலும்போது அந்த அறையின் அனைத்துக்கதவுகளையும், ஜன்னல்களையும் மூடியபின்பே தீயை அணைக்க முயலுங்கள். இது தீ ஏனைய அறைகளுக்குப் பரவுவதைத் தடுப்பதோடு, வெளியிலிருந்துகாற்று உள்ளே வருவதும் தடுக்கப்படுவதால் இலகுவில் தீயினை அணைக்கக் கூடியதாய் இருக்கும். ஆனல் அவ்வறையின் கதவு அகலத்திறந்திருப்பின் மாடிப்படிகளை அல்லது வேறு திறந்திருக்கும் பகுதிகளை புகை போக்கிகளாகச்செயல்பட வைத்து அணைக்க முடியாதளவுக்கு தீயைப்பரவச்செய்துவிடும்.

தீயானது ஒ சிலரால் மட்டும் அணைக்க முடியாதளவுக்கு பரவிவிட்டால் பலர் ஒன்று சேர்ந்து அணைக்க முயலுங்கள். இதன்போது காற்றுவீசும் திசைக்கு எதிர்த்திசை நோக்கி தீயை அணைத்துச்செல்லுதல், தீ மேலும் பரவுவதைத்தடுக்கும். நவீன நீர்க்குழாய் வசதிகள் அற்ற இடமாயின் கிணறுகளிலிருந்தே நீர் எடுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். அதிலும் சற்றுத்தொலைவிலுள்ள கிணருயின் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு ஒழுங்கான முறையில் இயங்கினுல்தான் தீயை மிக இலகுவில் அணைக்க முடியும்.

இதற்கு வாளித்தொடர் தீ அணைத்தல் முறையே பொருத்தமானதாகும். இதன்போது படத்தில் காட்டப்பட்டுள்ளபடி கிணற்றையும் தீப்பற்றியுள்ளகட்டிடத்தையும் இணைக்கும் முறையில் போதுமான வர்கள் இரண்டு வரிசையாக



ஒத்த இடைவெளிவிட்டு நிற்க வேண்டும். இவர்களைவிட கிணற்றில் நீரிறைத்து தொட்டியை நிரப்புவதற்கும் நீரை எரிகின்றகட்டிடத்தின் மேல் ஊற்றுவதற்குப்கூட நான்கைந்துபேர் ஆயத்தமாயிருத்தல் அவசியமாகும்.

கிணற்றில் இருந்து வாளி அல்லது குடம் போன்ற பாத்திரங்களில் நீரை நிறைத்து ஒரு வரிசையின் மூலயாக எரியும்வீட்டை நோக்கி அனுப்ப வேண்டும் தண்ணீர் வாளிகள் ஒன்றன் பின் ஒன்ருக வந்து கொண்டிருக்க தீ எரியும் கட்டிடத்தினருகில் உள்ளவர்கள். அவற்றைப்பெற்று நீரை கூரைமேல் தீ எரிகின்ற இடத்தை நோக்கி விசவேண்டும் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு அரைமணி நேரமோ அதற்குமேலோ கூட ஆகலாம். ஒரு வரிசையில் நீர்வந்த வண்ணம் இருக்க மறுதிசையில் வெறும் வாளிகள் கிணற்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கவேண்டும். (தொடரும்)

### மணிவாக்கு

தீமையைச் செய்து துன்புறுவதைவிட நன்மையைச் செய்து துன்புறுவது மேல்.

—பைபிள்

## நமது நோக்கு

# கோட்டை முகாமை மூடுக!

'பயங்கரவாதத்தை' முடிவுகட்டிய பின்னரே இனப்பிரச்னைத் தீர்வுக்குரிய தேர்தல் நடத்துவது சாத்தியமென்ற முடிவு ஜனாதிபதியின் இன்றைய நிலைமையைக் குறிக்கிறது

அரச பத்திரிகைகளும், வானொலி, ரூபவாகினியும் அண்மையில் நடந்த மோதலைக் குறிப்பிடும்போது 'பயங்கரவாதி'களும் அவர்களின் தலைவர்களும் அதிகமாகக் கொல்லப்பட்டதையும் அவர்களின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதையும் பெரும் செய்தியாக்கியிருக்கின்றன.

'வெற்றி பார்வைக்கெட்டிய அளவு' என்ற நிலையை இலங்கை ராணுவம் கிட்டியிருக்கிறதா?

மக்கள் கொலைசெய்யப்படுவதையும், ஆகாயவிமானத் தாக்குதல், முகாம்களின் 'ஷெல்'- இவற்றிலிருந்து வடக்கிலும், கிழக்கிலும் தப்பியோட்டி வாழும் அப்பாவிமக்கள், இனியாவது தப்பிப்பிழைக்கவழி கிடைக்கவேண்டுமென்பதே எமது பேரவா?

போராளிகளின் கோட்டைத் தாக்குதலை எதிர்கொள்வதென்ற முடிவு அரசு எடுத்திருக்குமாயின் யாழ்ப்பாணநகரை அழிக்கவல்ல கோட்டை முகாமை ஒரு புறநீங்கலாகக் கருதி அதனை அங்கிருந்து அகற்ற வேண்டியதன் அவசியத்தை நகரமக்கள் பேரில் மீண்டும் வற்புறுத்துகின்றோம். அதனை உடனடியாகச் செயற்படுத்தவேண்டுமென்று மன்றாடுவதில் எவ்வித அகௌரவமும் இல்லை.

சிங்களமக்களின் பெருநகரம் கொழும்பு என்றால், அதனைத் தாக்கும் வாய்ப்பு தமிழ் 'பயங்கரவாதிகளுக்'குண்டானால் நகருக்குப் பாதுகாப்பான கோட்டை ஒன்றில் பயங்கரவாத முகாம் ஏதோ ஒருவகையில் தொழிற்படத் தொடங்கிவிட்டால் அங்கு கொலைக்குள்ளாகும் அப்பாவிமக்களின் கதி கற்பனைக்கெட்டாததா?

இத்தகைய சூழ்நிலை மக்கள் மனத்திரையில் காண முடியாதபுதிரா? வரலாறு இவ்வித அதிசய சம்பவங்களைக் கொண்டிருக்கிறது

தலைகீழாக மாறிய நிலை எந்த மனிதனுக்கும் எந்த நாட்டிற்கும் எப்பவும் வரலாம். முன்னறிவித்தலின்றி நடைபெறக்கூடிய சம்பவங்கள் உலக வரலாற்றில் மலிந்து கிடக்கின்றன.

எனவே இதுகாறும் உயிரிழந்த மக்கள் வீரசுவர்க்கம் அடைவார்களென்று ஆறதலடைவோம். யாழ்ப்பாணத்தின் உயிருக்குஉயிரான யாழ். பெரியாஸ்பத்திரி, சிவில் நிர்வாகத்தின் இதயமான யாழ் செயலகம், மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்குதவும் வர்த்தகதாபனங்கள். உயர் கல்லூரிகள் அடர்ந்திருக்கும் நிலப்பரப்பே, யாழ் கோட்டை முகாமின் தாக்குதலுக்கு அடிக்கடி பலியாகின்றன.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன்போகிறதென்று நாம் சொல்லவில்லை. போராளிகள் கோட்டையைத் தாக்கும் போது நிகழும் அனர்த்தங்கள் அனைத்தும் நாமறிந்தவையல்ல, போராளிகளை திருப்பித்தாக்குதல் என்பது பொதுமக்களை அழிப்பதாகும்.

குறிப்பாக யாழ் பெரியாஸ்பத்திரி பல தடவை தாக்கப்பட்டது. நாகரிக உலகுக்கு பேரதிர்ச்சியாகும். சமாதானத்தின்முதற்படி இதனை அகற்றுவதே!

# அனைத்துலகுக்குமோர் அற்புதச் செய்தி

பாலைவனத்தில் பிணைவாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் எலும்புக்கூடுகள் பலிந்த இன்றைய உலகுக்கு ஆண்டவன் அளித்த வரம் அன்னை திரேசா.

விமானப் பயணத்தில் விபத்துக்குள்ளாகி தெய்வாதீனமாக காயங்களின்றி உயிர்தப்பிய அன்னை தாய்மைக்கு விஜயதசமி அன்று விசேட கருத்தை உலகுக்கு வழங்கியிருக்கிறார்.

'அன்னை திரேசா' ஆத்மிகத்தின் இக்காலப் புதுப்பதிப்பென்று நாத்திக நேரு குறிப்பிட்டிருந்தார் மகாத்மாவில் குடிகொண்டிருந்த மர்மசக்தியை அளவிடமுடியாத நேரு அன்னையின் அற்புதங்களில் உள்ளத்தை பறிகொடுத்தது எதனை விளக்குகிறது.

புலன் அடங்கப்பெற்ற துறவியினது ஆற்றலுக்கு அகன்ற விண்ணுலகை ஆளும் தேவர்க்கரசனான இந்திரன் வழியிழந்து வருந்திய சான்றே போதுமான தென்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

இன்று உலகியலில் உயர் பதவியடைந்து வாழும் அரசர்களும் ஜனாதிபதிகளும், பிரதமர்களும் தத்தம் நாட்டை பரிபாலிப்பதில் பல தோல்விகள் கண்டு செயலிழந்திருக்கின்றனர். அருள் ஒழுக்கம் எங்கும் குன்றியிருக்கும் காலம் இது.

அணுஆயுத போர்உலகை அழிக்கும் இக்கட்டான நிலைக்கு அச்சுறுத்திவருகிறது இந்தநிலையில் அரச பதவி இழிநிலை எய்தியிருக்கிறது.

எனவே மக்கள் உய்யும் வழி உண்டானால் அது தவத்தின் உயர்வுக்கு எடுத்துக்காட்டான அன்னை திரேசா போன்றவர்களின் ஆற்றலென்பதை இந்த அற்புதம் நினைவூட்டுகிறது.

# இலங்கைத் தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக சுவிஸில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

சுவிட்சர்லாந்து தலைநகர் பேணின்யிலிருந்து எஸ். செல்வம் என்பவர் அனுப்பியுள்ள செய்தியைக் கீழே தருகின்றோம்:-

பூசா இராணுவமுகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த அரசியற்கைதிகளின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றக் கோரியும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு மேலாக கொடிய சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் அரசியற் கைதிகளை உடன் விடுதலை செய்தல் வேண்டும் அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். அரசியற்கைதிகள் நீதி விசாரணையின்றி மிருகத்தனமாக சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது நிறுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும் 1000 இற்குமேற்பட்ட சுவிஸ்நாட்டு மக்களின் கையெப்பங்கள் கடந்த மாதம் 27ம் திகதி சுவிற்சலாந்தின் தலைநகரான பேணினில் இடம்பெற்ற அகதிகள் விழா ஒன்றில் சேகரிக்கப்பட்டது இந் நடவடிக்கைக்கு சுவிஸ் மக்களிடம் இருந்துபெரும்ஆதரவுகிடைத்தது.

இதைத்தொடர்ந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்னின்று ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை கடந்த மாதம் 29ம் திகதி ஒழுங்கு செய்தது. இவ்வூர்வலத்தில் ஈழப்புரட்சி அமைப்பு இணைந்து செயற்பட்டது. இவ்வூர்வலம் இனப்படுகொலைகளை கண்டித்தும், அரசியற் கைதிகளை கொடுமை செய்யப்படுவதைக்கண்டித்தும் நடாத்தப்பட்டது. இவ் ஊர்வலத்தில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்பு நடவடிக்கைகளின் விபரம் அடங்கிய பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்பாக ஆரம்பமாகி சிறிலங்கா தூதரகம்வரை சென்றது. அங்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்கள் சேகரித்த கையெப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்று தூதரகத்தில் கையளிக்கப்பட்டது

இவ் ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் சுவிஸ் நாட்டின் பல மாகாணங்களிலும் இருந்து வந்து கலந்து கொண்டார்கள். இவ்நடவடிக்கைகளுக்கு சுவிஸ் நாட்டின் மாக்ஸிஸ லெனினிக் கட்சி ஒத்துழைப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது

ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட சுலோகங்கள் வருமாறு;- ''சிறிலங்கா அரசே தமிழ்மக்களுக்கெதிரான இனப்படுகொலைகளை நிறுத்து'', ''அரசியற்கைதிகளை கொல்லாதே'', ''எமக்கு சுதந்திரம் வேண்டும்'', அப்பாவி மக்களை கொல்லாதே'', ''சி. ஐ. ஏ. மொசாட் ஒழிக'', மனித உரிமை மீறல்களை நிறுத்துக'', ''உலக நாடுகள் சிறிலங்காவிற்கான உதவிகளை நிறுத்த வேண்டும்'', ''எமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரி'', ''சிறிலங்கா இராணுவமே ஈழத்தைவிட்டு வெளியேறு'' போன்ற சுலோகங்கள் சர்வதேசமொழிகளில் எழுதப்பட்டிருந்தன. (எ

# "நாகசுரம் — தவில் கலைகளுக்கு பல்கலைக்கழக அந்தஸ்து பெற்றுத்தர முயல்வேன்"

## பயிற்சிப் பாடசாலை ஆரம்பத்தில் பேராசிரியர் வித்தி வாக்குறுதி

மாவிட்டபுரம், திங்கள் ''பாரம்பரியக் கலைகளான நாகசுர-தவில் கலைகளை பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தி பல்கலைக்கழக மட்டத்தில் அவற்றைப் பயிற்றுவிக்க ஆவன செய்வது அவசியம். அதற்கான முன்னோடியாக இப்பாடசாலை விளங்கவேண்டும். பல்கலைக்கழக மானியக் குழுவின் அனுமதியைப்பெற்று பொதுமக்களின் நிதியுதவியுடன் பல்கலைக்கழகத்தில் இக்கலைப்பிரிவுகளை அமைக்க முடிந்தளவில் முயற்சி எடுப்பேன்.''

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மண்டபத்தில் இடம்பெற்ற நாகசுர-தவில் பயிற்சிப் பாடசாலை ஆரம்ப வைபவத்தில் கலந்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கமும் மற்றும் பிரமுகர்களும் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நாகசுரங்கள், தவில்கள் பூசைக்கு வைக்கப்பட்டு சிவஸ்ரீ இ சுந்தரேஸ்வரக்குருக்களால் ஆயுதபூஜை செய்யப்பட்டு பயிற்சியாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

பழம்பெரும் நாகசுர வித்துவான்கள் எஸ். கே. இராசா. பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை மற்றும் நாகசுரக்கலைஞர்கள் என். கே. பத்மநாதன், எஸ். சிதம்பரநாதன், கே. ஆர். சுந்தரமூர்த்தி. வி. கே. கானமூர்த்தி, எஸ் ஆர். ஞானசுந்தரம் ஆகியோர் நாகசுரம் பயிலும் மாணவர்களுக்கு வித்தியாரம்பத்தை ஆரம்பித்து வைத்தனர். 18 பயிற்சியாளர்கள் நாகசுரம் பயில வந்திருந்தனர்.

தவில்பயில விண்ணப்பித்த 17 பயிற்சியாளர்களுக்கும் பிரபல தவில் வித்துவான் பி. பழனிவேல், தவில் வித்துவான் திரு. கே கணேசரத்தினம் ஆகியோரும் பிரபல தவில் வித்துவான் என். ஆர். சின்னராஜாவும் வித்தியாரம்பம் செய்துவைத்தனர்.

வலி. வடக்கு உதவி அரச அதிபர் செல்வி மைத்திலி சோமசுந்தரம் பயிற்சியாளர்களுக்கு பயிற்சிப்புத்தகங்களை வழங்கினார்.

கலாநிதி வித்தியானந்தன் இவ்வைபத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

பல்கலைக்கழகத்தில் தமிழ்க் கலைகளான பாட்டு, நடனம், வீணை, வயலின், மிருதங்கம் போன்ற கலைகளுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. நுண்கலைப்பிரிவில் இவற்றுக்கு இடமுண்டு. ஆனால் நாகசுர-தவில் கலைகளுக்கு அந்தநிலை இல்லை. அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்துறையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ததைப்போல் அவற்றையும் ஆரம்பிக்க முயற்சி எடுக்கவேண்டும். இதற்கு நிதி உதவி தேவைப்படும். பொதுமக்கள் உதவினால் மானியக்குழுவின் அனுமதிபெற்று இவற்றையும் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்க முடியும்.''

### அரசாங்க அதிபர்

யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமை தாங்கிப் பேசுகையில், ''தமிழ் மக்களின் மங்களகரமான நிகழ்ச்சிகள் யாவற்றிலும் முன்னணியில் திகழும் நாகசுர-தவில் கலைகளைப் பயில வசதிசெய்யப்படவேண்டும் என பல ஆண்டுகளாக எடுத்த முயற்சி இன்றுதான் கைகூடியுள்ளது துன்பநிலையிலும் இன்பத்தைத்தரக்கூடிய இவ்வாறான கலைகளை அழியவிடாது நாம் பேணிக்காக்க வேண்டும் அதற்கு இப்பாடசாலை வழிவகுக்கும்'' என்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், ''மங்கள வாத்தியங்களான நாகசுரம், தவில் தமிழர் வாழ்வுடன் ஒன்றிணைந்தவை. இறைவனையும் பக்தர்களையும் ஒன்றிணைக்கும் சக்தி கொண்டவை.

இக்கலைகளை நாம் பேணிக்காக்கவேண்டும்'' என்றார்.

### மக்கள் கலை

பேராசிரியர் கா சிவத்தம்பி பேசுகையில், ''பாரம்பரியக் கலைகளான நாகசுர-தவில் கலைகளுக்குப் பயிற்சிப் பாடசாலை ஒன்று அமைவது சமூக உந்துதல் காரணமாக ஏற்பட்டது என்று கூறலாம். சமூக வரையறைக்குள் இல்லாமல் மக்கள் கலையாக இதுபரிணமிக்க வழிபிறந்துள்ளது மகிழ்ச்சி தருகிறது யாருக்கு ஆர்வம் ஆற்றல் உண்டோ அவர்கள் இதைப்பயில முன்வர வேண்டும் என்றார்.''

யாழ் மாவட்ட அமைச்சு செயலாளர். திரு எஸ். பி. பாலசிங்கம் தவில் வித்துவான் என், ஆர் சின்னராஜா, நாகசுர வித்துவான் என். கே பத்மநாதன் இசை வேளாளர் சங்க செயலாளர் எஸ் ஆர். ஞானசுந்தரம் தெல்லிப்பழை ப. நோ. கூ.

(5ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

சங்க தலைவர் திரு எஸ். சிவ மகாராசா கலாசார அவை உறுப்பினர் திரு எஸ் திருச்செல்வம் உட்பட பலர் உரை யாற்றினர்.

வலி வடக்கு உதவியரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் நன்றி கூறினார்.


**கடைசி நேர வரி விளம்பரம்**

**தவறிவிட்டது**

கந்தசாமி நாகராஜா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 10-10-86 காலை உடுவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். க. நாகராஜா, 15 வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

[C-5200]


## ஷெல் தாக்குதல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம் நடத்தி யாழ். அரச அதிபரிடம் மகஜர் சமர்பித்திருந்த பின்னரும் கடந்த சனிக்கிழமை ஷெல் தாக்கி மகநோய் சிகிச்சை நிலையம் பலத்த சேதமடைந்ததும் தெரிந்ததே.

மேலும் இதுபோன்ற பயங்கரசம்பவம் நிகழ்வதால் யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெறும நோயாளர்களுக்கும் பாதுகாப்பில்லாததால் வைத்தியசாலையை மூட வேண்டும் என்று கூட்டத்திலுள்ளோர் கோஷமிட்டனர்

மேலும் கோட்டை இராணுவ முகாம் அகற்றப்படும் வரை யாழ். வைத்தியசாலை இயங்கக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து பின்வரும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

''இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் அவசரசிகிச்சைக்கு வரும் நோயாளர்களை மட்டும் யாழ். வைத்தியசாலையில் அனுமதிப்பது; அத்துடன் அவசர சிகிச்சைமட்டும் நடாத்துவது

நாளைபுதன்கிழமை தொடக்கம் வெளிநோயாளர் பிரிவு மூடப்படும். மருத்துவசேவைகள் இடம்பெறுது

இதுபோன்று படிப்படையாக ஆஸ்பத்திரி நடவடிக்கைகள் குறைக்கப்படும்''

இத்தீர்மானங்கள் ஜனாதிபதிக்கும், யாழ். அசாங்க அதிபருக்கும், சுகாதாரப்பணிப்பாளர் மற்றும் அதிகாரிளுக்கும் அனுப்பவைக்கப்பட்டுள்ளன.

(மா)

## குண்டுவீச்சு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கியதில் ஒருலொறி முற்றாக எரிந்ததுடன் ஒருவர் பலியானார். மூவர் படுகாய முற்றனர். மற்றும் இருலொறிகள் பலத்த சேதமடைந்துள்ளன. [மா]

## சிலிண்டர்---

(1ம் பக்க தொடர்ச்சி)

மாக்கப்பட்டதுடன், அதில் வந்த நான்கு ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்'' என்று தமிழீழ ராணுவம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை மணிநேர நேரடி மோதல் இடம்பெற்றதாயினும் தமது தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில்

[பளை நிருபர்]

மன்னாரில் மரணமடைந்த விடுதலைப் புலிகளின் தளபதி விக்ரருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக சாவகச்சேரி வர்த்தகர்கள் அனைவரும் இன்று கடைகளைப் பூட்டி வாழை தோரணம் கட்டி அஞ்சலி செலுத்தினர்.

ஹெலிகொப்டர் பலமுறை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. [ஊ]

## கிளிநொச்சிப் பகுதியில்

கிளிநொச்சி, திங்கள்

மன்னாரில்இராணுவத்துடன் போரிட்டு மரணமெய்திய தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மன்னார் பொறுப்பாளர் விக்ரருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக உருத்திரபுரம், கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் இன்று 13-ம் திகதி துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. தோரணங்கள் பல இடங்களிலும் கட்டப்பட்டிருந்தன [ஊ]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
கந்தையா நல்லம்மா

தோற்றம்:
7 - 06 - 1909

மறைவு:
14 - 09 - 1986

எம்மைப் பெற்று சீராட்டி பாராட்டி வளர்த்த எங்கள் அருமைத் தாயார் இவ்வுலகை விட்டு இறைவன் திருவடி சேர்ந்து இன்று முப்பத்தொரு நாளாகின்றன. அவர்கள் காட்டிய நல்வழியில் நின்று பணிபுரிய ஆசிர்வழங்குமாறு வேண்டுகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. பிரான்ஸ் நகரில் நிகழ்ந்த செய்தியைக் கேள்வியுற்று நேரில் வருகைதந்து அஞ்சல் மூலம் விசாரித்து ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி வீதி.
கொக்குவில்.

[C5204]

## முதலாம்வருட நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை
சௌந்தரராஜன்
[வேக கை முஹமட்]

மண்ணுலகில்:
19-02-57

மண் மீட்புக்காக:
16-10 85

மனைவி, பிள்ளைகள்,
நண்பர்கள்.

342. அன்புவழிபுரம்,
அனுராதபுரய சந்தி,
திருமலை.

[C 5207]

## தலையாட்டி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லையில் இராணுவம் ஈடுபட்டது. இச்சமயம் சாதாரணமாகச் சாரமும், சேர்ட்டும் அணிந்துவந்த இராணுவ சிப்பாயையும் இம்முகமூடி மனிதர் பார்த்துத் தலையாட்டினார். இதனால் கோபமுற்ற இராணுவ வீரர் தலையாட்டிக் கொண்டுநின்ற நபரை நையப் புடைத்தார். பின்பு இந்தமுகமூடி மனிதரை இராணுவம் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். [ச]

## இலங்கை---

[ ம் பக்கத்தொடர்ச்சி]

முன்வந்திருந்தாலும் இதன் முன்னரும் பலவகைகளிலும் மறைமுகமாக அமெரிக்கா உதவியிருப்பதைச் சுட்டிக்காட்டியே இவ்வட்டாரங்கள் தமது கருத்தை வெளியிட்டுள்ளன.

அண்மையில் அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பல் 'கிட்டி ஹோக்' பல துணைக் கப்பல்களுடன் கொழும்புத் துறைமுகம் வந்திருந்ததும், அதன் பின்னர் பல அமெரிக்க ராணுவ உயரதிகாரிகளின் இரகசிய விஜயங்களும் அமெரிக்காவின் இந்த இராணுவ உதவித் திட்டத்திற்குவழிகோலியிருக்கலாமெனவும் அவ்வட்டாரங்கள்கருத்துவெளியிட்டுள்ளன. [ஊ]

## 16 சிப்பாய்கள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்டவற்றின் விபரங்கள்வருமாறு:

''16 இராணுவத்தினரின் உடல்கள். 14 ஏ. கே. ரைபிள்கள். 40 மேற்பட்ட ஏ கே ரைபிள்ரவைக் கூடுகள் 6000 மேற்பட்டஏ.கே ரைபிள்ரவைகள், 1 கோல்ற்கொமாண்டோ ரைபிள், ஏ கே, எல் எம் ஜி ரவைகள் சில, 2 அங்குல மோட்டர் ஒன்றும் சிலமோட்டர்ஷெல்களும் கொமாண்டோ மோட்டர் ஒன்று. ஆர் பி ஜி ஒன்று, 2 வோக்கிடோக்கிகள்.

''அத்துடன் இருராணுவத்தினரையும் எமது வீரர்கள் உயிருடன் கைது செய்துள்ளனர்'' இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது''

## வீரமரண---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதி கிட்டு மற்றும் முக்கிய உறுப்பினர்களின் வாகனங்கள் பின்தொடர்ந்து சென்றன.

தளபதி விக்டரின் பூதவுடல் தாங்கிய பேழை யாழ். புனிதமரியாள் பேராலயத்தில் வைக்கப்பட்டு ஆராதனை நடைபெற்றது. ஆராதனை முடிவடைந்ததும் ஆலய முன்றலில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஏராளமான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்கள். [மா]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

**உயிரியல் தொழில் நுட்பத்தில்**

**முதுவிஞ்ஞானமாணி**

MASTER OF SCIENCE
IN BIOTECHNOLOGY

1987/88 ஆம் ஆண்டுக்கு உயிரியல் தொழில் நுட்பத்தில் (Biotechnology) முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்திற்குப் பதிவுசெய்யவிரும்பும் பொருத்தமான தகைமை பெற்றவர்களிடமிருந்து 1986 ஒக்டோபர் 20ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

இரசாயன, உயிரியல், வைத்திய, பல்வைத்திய, விவசாய பொறியியல் பட்டதாரிகள் எடுத்துக்கொள்ளப்படுவர் விண்ணப்பத்தைச் சொந்தத்தரவுகளுடன் அனுப்பவும். எல்லா விண்ணப்பதாரிகளும் தகுதித் தேர்வொன்றுக்கும் நேர்முகத்தேர்வொன்றுக்கும் தோற்றுதல்வேண்டும்.

இது தொடர்பான கடிதங்களை பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்:
யாழ்ப்பாணம்.
1986 ஒக்டோபர் 9ஆம் திகதி.

[A 1462]


புதிய வெளியீடு
**வெலிங்டன்**

10-30, 2-30. 4-30. 6-30

பழிக்குப்பழி வாங்கும், திகிலூட்டும். சண்டைகள் நிறைந்த

MAD MAX BEYOND
THUNDER DOME
Sex Action
[Adults Only]

**லிடோ**

தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30

பிரபு - நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கலர்
**நியாயம்**

**அதிஸ்டலாபச் சீட்டு**

தமிழ் ஈழ ராணுவத்தின் தமிழ் ஈழம் போர் நிதி அதிஸ்ட லாப சீட்டுக்களை மொத்தமாக விற்பனை செய்ய வடமாகாண விநியோகஸ்தருள் எம்மையும் நியமித்துள்ளார்கள் என்பதை பெருமகிழ்வுடன் மக்களுக்கு அறியத் தருகிறோம்.

**வீனஸ்**

ஸ்ரான்லி வீதி. (ஸ்ரீதர் சினிமா அருகாமையில்)
யாழ்ப்பாணம். (A 1500)

**முக்கிய அறிவித்தல்**

பாஸ்போட், (Bond) பொண்ட்
ஆகியனவும்
இந்தியா விசா, ரிக்கற்
ஆகியவையும உடன் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

M. சிலுவைராசா,
நவாலி தெற்கு. மானிப்பாய்.
கிளை விலாசம்;
நியு வின்ரி கவுஸ்,
இல: 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C 5205]


**கண்ணீர் அஞ்சலி**

விடுதலைக் களத்தில் தம்முயிர் நீத்த
வீரவேங்கைகள்
தளபதி விக்டருக்கும் - வீரர் ரேமுக்கும்
எமது
வீரவணக்கமும். அஞ்சலியும்!
அன்புடன்

நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ்,
60, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(C 5208)

**கண்ணீர் அஞ்சலி**

மன்னார்ப்பகுதி விடுதலைப் புலிகளின் பொறுப்பதிகாரியும், மத்திய குழு உறுப்பினருமான லெப்டினன்ட் விக்டர் இரண்டாவது லெப்டினன்ட் ரேம் ஆகியோரின் வீரமரணத்துக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், வீரவணக்கத்தையும் செலுத்திக்கொள்கிறோம்.

மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A 1463]




இந்த நாட்டிலிருந்து யப்பான் சில ரக மீன்களை இறக்குமதிசெய்கின்றது அம்பர்கள், கடற்சங்குகள், இரத்தினக்கற்கள், இல்மனைட் என்பன வேறு நாடுகட்கு ஏற்றுமதியாகின்றன. தேயிலையைப் பிரிட்டனும், எகிப்தும் அதிகம் வாங்குகின்றன.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இப்பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் அவற்றை மீண்டும் மெருகுபடுத்தி வேறு நாடுகட்கு ஏற்றுமதிசெய்கின்றன.

எமது மூலவளங்களின் வளத்தை அறியாத மூளைசாலிகள் இருக்குமட்டும் எமக்கு விடிவு ஏற்பட இடம் ஏது?

- பாணபத்திரன்

# சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டால் சனசமூகநிலையங்கள் சிறப்பாக இயங்கும்'

கொழும்புத்துறை, திங்கள்

''சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கவேண்டுமானால் நாம் எல்லோரும் சேவைமனப்பான்மையுடன் செயற்படவேண்டும். கிராம முன்னேற்றத்திற்கான முயற்சிகளைச் சனசமூக ஒன்றியங்கள் மேற்கொள்ளவேண்டும்''

இவ்வாறு சுழிபுரம் அபிவிருத்திச்சபை உப அலுவலக எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் ஒன்றியத் தலைவர் திரு. இ ஜெயகோபால் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச்செயலாளர் திரு சி வரதராசா உரையாற்றுகையில், ''தற்போதுள்ள சூழ்நிலையில் சனசமூக நிலையங்கள் கிராமத்திற்குச் செய்யப்படவேண்டிய பணிகள் அளப்பரியன. பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றமடையச் செய்வதும், கிராம மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதும் இந்நிலையங்களின் முக்கிய கடமையும், பொறுப்பும் என்பதை மறுக்கமுடியாது'' என்று கூறினார்.

சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ விஜயநாதன், ஒன்றியச் செயலாளர் செல்வி எம். வேல்விழி ஆகியோர் உரையாற்றினர். [ச]

# விவசாயப் பயிற்சி மூலம் பெண்கள் பயனடைகின்றனர்

யாழ்ப்பாணம் செவ்

''திருநெல்வேலி விவசாய பண்ணையில் பல பெண்கள் வருடாவருடம் பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர் வருடத்தில் சுமார் 200 பேர் வரை 13 மாதம், 4 மாதம், 2 வாரம் பயிற்சி பெற்று வெளியேறுகிறார்கள்.''

யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திரு எஸ் கிருஷ்ணபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விவசாயப் பயிற்சி பெற்ற மாணவிகளுக்குத் தராதரப்பத்திரம் வழங்கும் விழாவில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

திருநெல்வேலி விவசாயப் பண்ணை விரிவுரை மண்டபத்தில் விவசாயப்பண்ணை முகாமையாளர் திரு ப. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபத்தில் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை தொடர்ந்து பேசுகையில்;

'முயற்சியின் பயன்களை அநுபவிப்பதில் தமிழ்மக்கள் வல்லவர்கள். பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே வீட்டு திட்டம் தீட்டி வருமானத்தைக்கூட்டக்கூடியவழி வகைகளை இங்கு பெறும் பயிற்சிகளின் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவர், எமது வருங்காலச் சந்ததியினர் திடகாத்திரமான தேகாரோக்கியத்தைப் பெற்று சுகதேகிகளாக இருக்கவேண்டுமானால் போஷாக்குள்ள உணவுப்பயிர் வகைகளை வீட்டுத்தோட்டத்தில் பயிரிட வேண்டும். என்றும் கூறினார். (இ)

# "நடமாடும் சிகிச்சை நிலையங்களை நல்ல முறையில் பயன்படுத்தவும்"

பளை, திங்கள்

''நாட்டின் தற்போதைய சூழ்நிலையி நடமாடும்சிகிச்சை நிலையங்களை நாட்டின் பலபகுதியிலும் அமைப்பதன் மூலம் பொதுமக்கள் எவ்வளவோ நன்மை அடைகின்றார்கள். ஆகவே ஒவ்வொருவரும் இச் சிகிச்சை நிலையத்தை துஷ்பிரயோகம் செய்யாமல இதனை நல்லமுறையில் பயன்படுத்தி நன்மையடையவேண்டும்''.

பளை உதவி அரசபணிமனையினதும், பரந்தன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினதும் ஆதரவுடன் இயக்கச்சி மக்களின் நலனுக்காக இயக்கச்சி கனிஷ்டவித்தியாலயத்தில் நடமாடும் சிகிச்சை நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் தலைமை வகித்துஉரையாற்றிய பளைஉதவி அரசாங்க அதிபர் எஸ் கந்தசாமி இவ்வாறு கூறினார்.

அபிவிருத்தி அலுவலர் மு. தருமலிங்கம் தமது வரவேற்புரையில், ''நடமாடும் இச் சிகிச்சை நிலையங்களை கிராமம் தோறும் நிறுவுவதன் மூலம் எவ்வளவோ ஏழைமக்கள் இலவச கிகிச்சை பெற்று நல்ல பலனை அடையக்கூடியதாக உள்ளது'' என்றார்.

மற்றும் சிரேஷ்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சுவாமிநாதன், அதிபர் அரியரத்தினம், டாக்டர் திருமதி ஆர். குமாரதேவன், டாக்டர் பி எஸ் பாலரஞ்சித் ஆகியோரும் உரையாற்றினர்கள். பளை விசேடசேவை அலுவலர் க. பத்மநாதன் நன்றி கூறினார். [வா]

## வட்டு. லயன்ஸ் அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

திருநெல்வேலி முத்துத்தம்பி மகளிர் அநாதை விடுதியிலுள்ள மாணவிகளின் நலன் கருதி சீருடைகள், தலையணைகள், அப்பியாசக் கொப்பிகள் ஆகியன உட்பட சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் கடந்த வாரம் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இல்ல மகளிர் தங்கள் பொருள்களை பாதுகாப்பாக வைப்பதற்கான அலுமாரிகளையும் விரைவில் அன்பளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எமில் அத்தநாசியார் தெரிவித்தார். (எ)

## கல்விக் கண்காட்சி

இருப்பிட்டி, திங்கள்

புங்குடுதீவு மடத்துவெளி கமலாம்பிகை கனிஷ்ட மகா வித்தியாலய கல்விக்கண்காட்சி வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் அதிபர் திரு த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது

## வாங்குகள் அன்பளிப்பு

பண்டத்தரிப்பு, திங்கள்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் பண்டத்தரிப்பு அரசினர்கிராமியவைத்தியசாலையில் வெளிநோயாளர்பிரிவில்நோயாளர்கள் இருக்க இடமில்லாது கஷ்டப்படுவதை நீக்குமுகமாக இரு வாங்குகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் இ செல்வநாயகம் இதற்காக வட்டு. லயன்ஸ் கழகத்தனருக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளார். (எ)

# இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
திகதி- 28 (14-10-1986)
கிழமை- செவ்வாய்
திதி- ஏகாதசி
நட்சத்திரம்- சதயம்

மேடம்- பேராசையின்மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள். மறைமுக எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும். முன்னெச்சரிக்கை நன்று.

இடபம்- வாகனச் சாரதிகளுக்கு சிறப்பான தினம். வரவிலும் திருப்தி காணப்படலாம். தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கும்.

மிதுனம்- தெளிந்த மனம். தெய்வ சித்தம். தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

கடகம்- குடும்பத்தில் சிறு பிணி வாட்டும். இதன்மூலம் வைத்தியச் செலவுகளும் ஏற்படலாம். கடமையில் அதிக கவனம் செலுத்தவும்.

சிங்கம்- குளுமையான சம்பவங்கள் நடைபெறும். வாழ்க்கையில் வசந்தம் வீசும். களஸ்திர வழியால் சுகமும் உண்டு.

கன்னி- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றப் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

துலாம்- உங்கள் நடவடிக்கையில் தனிச்சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார்

விருச்சிகம்- தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டிற்கு இலக்காவீர்கள். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம்.

தனுசு- பொருளாதாரநிலை சீரடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவிற்கும் இடமுண்டு. வெளியூர்களிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

மகரம்- ஏமாற்றத்தின் தாக்குதல் வேதனையைத் தரலாம். குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும்.

கும்பம்- ஆசை அலைகள் போதும். வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும். ஆணவப் போக்கினால் பிறரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும்.

மீனம்- பெரிய இடத்துச் சினேகம் இன்று ஏற்படலாம். புது வழிகளின்மூலம் பணம் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

திருமலை
க. வே. ரவீந்திரன்

## கல்வி இலாகா நடவடிக்கை

உடுவில், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டபாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்குரிய விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய இலக்கங்களை ஒழுங்காக வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் பல ஆசிரியர்களுக்கு இன்னமும் விதவைகள் அநாதைகள் ஒய்வூதிய இலக்கம் வழங்கப்படாதிருக்கின்றது. இவ்வாறான இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளாத ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை கல்வித்திணைக்களம் பாடசாலை அதிபர்களிடம் கேட்டுள்ளது.

ஆசிரியர் முழுப்பெயர், பதிவு இலக்கம். முதல் நியமன திகதி ஆசிரியருக்கு வழங்கப்பட்ட விதவைகள், அநாதைகள் உபகாரச்சம்பள இலக்கம் ஆகிய விபரங்களை கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும், விதவைகள், அநாதைகள் ஒய்வூதிய இலக்கம் வழங்கப்படாத சகல ஆசிரியர்களும் தமது திருமண பதிவுச்சான்றிதழ் மனைவியின் பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றுடன் ஒய்வூதிய இலக்கம் பெற்றுக்கொள்வதற்கான பிரகடனத்தை செய்யுமாறும் யாழ். கல்வித் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [சி]

## முதுகலைமாணிப் பட்டம் பெற்றார்

உடுவில், திங்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட முதுகலை மாணி கல்வியியல் பரீட்சையில் உடுவில் இராமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி சரோஜினி கல்யாண சுந்தரேசன் முதல் வகுப்பில் சித்தியடைந்துள்ளார்,

உடுவில் இராமநாதன் கல்லூரி சிரேஷ்ட விஞ்ஞான பட்டதாரியாகிய இவர் 1970ம் ஆண்டிலிருந்து இராமநாதன் கல்லூரியில் கரம் இரண்டு விசேஷ அதிபர் பதவியையும் வகித்து வருகிறார். [சி]

# கிராமிய அபிவிருத்திக்கு-----------

# இளைஞர் யுவதிகளின் பங்கு அவசியம்

வவனியா, திங்கள்

''கிராமிய அபிவிருத்திக்கு இளைஞர்கள், யுவதிகளுடைய பங்களிப்பு அவசியமாகின்றது. எந்தவொரு திட்டமும் நடைமுறைச் சாத்தியமடைவதற்கு இவர்களுடைய ஒத்துழைப்புமிக அவசயமானது.''

இவ்வாறு வவனியா உதவி அரச அதிபர் காரியாலயத்தில் நடைபெற்ற அனைத்துலக குடியிருப்பாளர் கருத்தரங்கிற்கு தலைமை வகித்து பேசுகையில் உதவி அரச அதிபர் திரு கே. ஐயம்பிள்ளை தெரிவித்தார்.

இவர் மேலும் தனது உரையில்:- கிராமிய மக்கள் தமது சுற்றாடலில் இருந்து பெறக்கூடிய மூலப்பொருள்களைக் கொண்டு தரமான சுகாதார வசதிகளுடனான வீடுகளை அமைத்துக்கொள்ள முடியும். சுற்றாடல் சுகாதாரம் மட்டும் மனிதனுக்கு போதாது; சத்துள்ள உணவு வகைகளையும் அவன் உட்கொள்ள வேண்டும் இதற்காக ஒவ்வொருவரும் தமது வீட்டுக்கு அருகாமையில் வீட்டுத்தோட்டம் அமைப்பது அவசியமானது'' என்று கூறினார்

உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு எஸ். தில்லைநடராஜா பேசுகையில்:-

''வவனியா மாவட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான கிராமங்கள் உண்டு. இக்கிராமங்கள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்து செழிப்புற வேண்டும். கிராமிய மட்டத்தில் உள்ளவர்கள் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்'' என்றார்

இவ் வைபவத்தில் பிரஜைகள் சபைத் தலைவர் திரு. என் சேனாதிராஜா, இராசேந்திர குளம் கிராமோதயசபைத் தலைவர் திரு. கே. சீனிவாசகம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர் திரு எஸ் செல்வரட்ணம் ஆகியோரும் பேசினார்கள். (ஊ)

## நல்ல இன விதைகள்

சுண்டிக்குளி, திங்கள்

யாழ். செயலகத்தில் அமைந்துள்ள கமநல சேவை நிலையத்தில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான நல்ல இன விதைகள் விற்பனையாகின்றன.

## ப. நோ. கூ. ச. ற்கு புதிய உப விதிகள்

கொழும்புத்துறை. திங்கள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கெனப் புதிய உப விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன இப் புதிய உப விதி யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு இம் மாதம் 19ம் திகதி அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் யாழ் மாவட்ட தேசிய கூட்டுறவு சபையினால் இவ்வறிமுக விழா நடாத்தப்படட்து.

இவ் விழாவில் புதிய உப விதிகள் தற்போது நடைமுறையிலுள்ள உப விதிகளுடன் ஒப்புநோக்கப்படும். என்று தேசிய கூட்டுறவு சபைத்தலைவர் திரு சி சிவமகாராசா தெரிவித்துள்ளார். (சி)

# "உணவு முத்திரை விநியோகத்தில் பல குறைபாடுகள் உண்டு"

நெல்லியடி திங்.

"இன்று உணவு முத்திரை விநியோகத்தில் பல குறைபாடுகள் உள்ளன. இதற்கு ஒரு காரணம் புதிதாக கிராம சேவையாளர் இடமாற்றம் செய்யப்படுவதாகும். அவ்வப் பகுதி மக்களின் வாழ்க்கைநிலை பற்றிய சரியான தகவல்களை அவர்கள் உடனடியாகப் பெற முடியாதிருக்கிறது."

இவ்வாறு வடமராட்சி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. இ ஐயாத்துரை தம்மைச் சந்தித்த நெல்லியடி பிரஜைகள் குழுவின் தூதுகோஷ்டிக்கு விளக்கமளிக்கும்போது கூறினார்.

இச்சந்திப்பின்போது பிரஜைகள் குழுவினர் தாங்கள் முன்னர் கேட்டவாறு உணவு முத்திரை வழங்கப்படுவோரின் பட்டியல் ஒன்று பொது இடங்களில் தொங்கப்படல் வேண்டுமென்றும் தங்கள் உறுப்பினர் இதுபோன்ற விடயங்களில் அரசாங்க உதவி அதிபருக்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் கூறினர்கள். இச்சந்திப்பில் துன்னாலை தெற்குகிராமசேவையாளர் திரு. எஸ் ஞானச்சந்திரனும் சமூகமளித்தார்.

## விவசாயக் கருத்தரங்கு

மாவிட்டபுரம், திங்கள்

இளவாலைப்பகுதி விவசாயிகளின் நலன்கருதி மாவிட்டபுரம் லயன்ஸ்கழகம் இம்மாதம் 25ம் திகதி விவசாயக் கருத்தரங்கு ஒன்றை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடத்த இருக்கிறது.

யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ் கிருஷ்ணபிள்ளை உட்பட பல்வேறு விவசாய உத்யோகத்தர்கள் இதில் கலந்து ஆய்வுரை நிகழ்த்துவதுடன் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படஉள்ளது.

மாவை லயன்ஸ்கழக விவசாய விஸ்தரிப்பு தலைவர்கள் திரு. க. குமாரதேவன், திரு. வே.குமாரசுந்தரம் ஆகியோர் இதற்கான ஏற்பாட்டை செய்துள்ளனர். (இ)

## முதலிடம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ் மாவட்டரீதியில் நடைபெற்ற ஆங்கில தினப்போட்டியில் நல்லூர் இந்து தமிழ் மகளிர்பாடசாலையைச்சேர்ந்த செல்வி எச். கல்யாணி (ஆண்டு9) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மேற்படி பாடசாலையைச் சேர்ந்த ஆண்டு மாணவிகளான சு. தினப்பிரியா, த கவிதா, பி குமுதினி ச. அல்விழி, க. திலகராணி, செ. ஜமேலா, ச. சுகிர்தா, ச. சண்முகப்பிரியா, ச. திருவேணி, க. மகிழ்ஜினி, சிவபதி. சிவரஜினி ஆகியோர் வாசி பு. குழுப்பாடல ஆகியவற்றில் பங்குபற்றி பாடசாலை ரீதியில் மூன்றும் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம்

கொழும்புத்துறை, திங்.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபை ஊழியர்கள் நலன் புரிச்சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. ரி. பி. முருகையா தலைமையில் இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. (சி)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



09 09-1986ல் இறைவடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

**பொன்னையா சிவசுப்பிரமணியம்**

(Retd. Royal Ceylon Navy, British Navy, Trincomalee, Karainagar)

அவர்களின் வீட்டுக் கிருத்திய வைபவம் 14-10-86 செவ்வாய்க்கிழமை நடைபெறும். பகல் 12-00 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் இங்ஙனம்: மனைவி மக்கள், மருமக்கள். மஞ்சத்தடி, இணுவில், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

C 5198

GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ, மானிப்பாய்.

A 1391

## அகதிகளின் உதவிகள் நிறுத்தம்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி வித்தியாலயத்தில் உள்ள விடுதியில் தங்கியிருக்கும் திருமலை அகதிகளுக்கு அரசாங்கத்தால் இதுவரை வழங்கப்பட்ட உதவிகள் யாவும் கடந்த மாதம் 15ம் திகதியிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளன திருகோணமலையில் சுமுக நிலை ஏற்பட்டுவிட்டதால் அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியேறலாம் என்று அகதிகளுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் காரணம் காட்டப்பட்டிருக்கிறது. இதனால் இங்குவாழும் 15 குடும்பங்கள் செய்வதறியாது அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத்திடம் முறையிட்டிருக்கிறார்கள்.

அகதிகள் புனர்வாழ்வுச் சங்கத்தலைவர் திரு. ந. நாகராசா வேலணை உதவியரசாங்க அதிபர், யாழ் அரசாங்க அதிபர் அகதிகள் புனர்வாழ்வு அமைச்சின் செயலளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் திருமலையில் இன்னும் அகதிகள் போய் வாழக்கூடிய நிலைவரவில்லை. ஆதலால் நிறுத்திவைக்கப்பட்ட உதவிகளை மீண்டும் வழங்கவேண்டுமெனக் கேட்டுள்ளனர். [மா]

## விஷேட பஸ், படகு சேவை

மானிப்பாய், திங்கள்

காவலூர்த் தொகுதியிலுள்ள பாடசாலை ஆசிரியர்களின் போக்குவரத்துக் கட்டணம் நாளொன்றுக்கு ஆறு ரூபா வீதம் குறைத்து அறவிடுவதற்கு விஷேட ஏற்பாடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வேலணைக் கிளைச் செயலாளரும் சங்கத்தின் துணைப்பொதுச் செயலாளர்களில் ஒருவருமான திரு. அ. அருமைநாயகம் மேற்கொண்டுள்ளார்.

திரு அருமைநாயகம் மினிபஸ் உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகளுடனும். படகோட்டிகள் சங்க பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டு தினமும் யாழ் நகரிலிருந்து பிரயாணம் செய்யும் ஆசிரியர்களின் போக்கு வரத்துச் செலவை குறைத்துச் சலுகையளிப்பதற்கான ஏற்பாட்டுடன் உரிய நேரத்தில் பாடசாலைகளை சேர்ந்தடைவதற்கான விஷேட பாடசாலை பஸ் படகு போக்குவரத்துச் சேவை நடாத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளார். (இ)

## நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு திங்கள்

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யாழ் தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டிடத்திலுள்ள சங்க அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. புதவருட உத்தியோகத்தர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; பொ, செல்வரத்தினம், உப தலைவர்: வி கே சுப்பிரமணியம், செயலாளர்: வை. வெங்கடாசல ஐயர், பொருளாளர்: த சீவரத்தினம் உதவியரசாங்க அதிபர் ரீதியாக 13 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்,

## முதல் இடம் பெற்றார்



யாழ்ப்பாணம், செவ்

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் பிரிவு II ஆண்டு பத்துக்கான ஆங்கில வாசிப்பு நிகழ்ச்சியில் யாழ். கொழும்புத்துறை சென் ஜோசவ்ஸ் வித்தியாலய மாணவன் செல்வன் யூட்லன் சுதன்பாபு முதலாமிடத்தினைப் பெற்று அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 1984ல் நடைபெற்ற மேற்படி போட்டியிலும் முதலாமிடத்தினைப் பெற்றுக்காண்டமை குறிப்பிடத்தக்கது.

## நூல்நிலையங்கள் ஒற்றுமையை வளர்க்க வேண்டும்

உடுவில் திங்கள்

"நூல் நிலையங்கள் புதினப் பத்திரிகைகளை மட்டும் வாசிக்கும் நிலையங்களாக மட்டும் செயல்படக்கூடாது. அவை சமய அறிவைப்பரப்புவையாகவும் கிராம அபிவிருத்திக்காக உழைப்பனவாகவும், கிராம ஒற்றுமையை வளர்ப்பனவாகவும் விளங்கவேண்டும்".

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவில் கிராமிய விழிப்பு மன்ற ஆதரவில் புதிதாக கட்டப்பட உள்ள நூல் நிலையத்துக்கான அடிககல் நாட்டுவிழாவில் உரையாற்றிய இணுவில் சமாதான சபை தலைவர் திரு தி. கி. சண்முகலிங்கம் இவ்வாறு கூறினார்.

சட்டத்தரணி திரு. அ. தெய்வேந்திரம் நூல்நிலையத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

டாக்டர் கே. எஸ் பரஞ்சோதிநாதன் பதுமடம் சமாதான சபைத்தலைவர் செ தில்லைநாதன், அ. தெய்வேந்திரம் உட்பட பலரும் அங்கு உரையாற்றினர்.

## பயிற்சியாளர்களால் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, திங்கள்

தமிழ்ப் பகுதிக்கென கிளிநொச்சி 155ம் கட்டையில் இயங்கி வரும் தேசிய இளைஞர் சேவை மன்ற பயிற்சி கலாசாலைக்கு இந்த தவணையாண்டில் விவசாயம், மேசன் வேலை, தச்சுத்தொழில் பயிற்சிக்கென தெரிவான 50 பேர் பயிற்சிக்கு வருகை தராததனால் பிரஸ்தாப கலாசாலை ஸ்தம்பிதமடைந்துள்ளது (வா)

## கருத்தரங்கு

ஊர்காவற்றுறை திங்

ஊர்காவற்றுறை ப நோ கூ. சங்கத்தில் ஊழியர்கள் இயக்குநர்களுக்கிடையில் ஒரு கருத்தரங்கு திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

மாரிகாலங்களில் ஊர்காவற்றுறைப்பகுதி மக்கள் தட்டுப்பாடின்றி உரம் பெறக்கூடிய வகையில் கிருமிநாசினி, விதை நெல் உணவுப்பொருட்கள் போன்றவைகளை சேமித்து வைப்பதென்றும், சங்க ஊழியர்களுக்கு நோய், துன்பம் ஏற்படும் காலங்களில் அவர்களுக்கு நிவாரணமாக ரூபா 6000/- கடன் வழங்குவதென்றும் இக்கருத்தரங்கில் இணங்கிக்கொள்ளப்பட்டது.

கருத்தரங்கில் ஊழியர்கள் குறைபாடுகளை தொழிற்சங்கச்சார்பில் திரு. எஸ். சிற்றம்பலம் எடுத்துரைத்தார். [ஊ]

## நல்லூர் கல்வி வட்டாரப் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி கடந்த 3, 4 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில். நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி ஒழுங்கமைப்பின் கீழ் நடைபெற்றது.

பிரதமவருந்தினராக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கலந்து கொண்டுபொருட்காட்சியைத் தொடக்கி வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக பிரதம கல்விஅதிகாரி திரு. வி. தங்கராசா, பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டக் கல்வி அதிகாரிகள், கல்வி ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

திறப்புவிழாவின்போது நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் சாரணர்களும், சாரணிகளும் அணிவகுத்து நிற்க, மாணவர்களின் கோலாட்டமும், சிறுமிகளின் மயில் நடனங்களும் இடம்பெற்றன.

பொருட்காட்சி மண்டபங்கள் யாவும் மாணவர்களின் கைவண்ணங்களையும் கருத்து வெளிப்பாடுகளையும் விஞ்ஞான ஆராய்ச்சித் திறன்களையும் அறிவுத்திறன்களையும் வெளிப்படுத்துபவையாக அமைந்திருந்தன. இருபத்திநாலு காட்சி அறைகள், பல கல்வித்துறைகளையும் பாடங்களையும் விளக்குவனவாக அமைந்திருந்தன. மாணவர்கள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையும் இந்து மகளிர் கல்லூரி மாணவ தலைவிகளும், நல்லூர் வட்டாரச் சாரணர்களும், சாரணிகளும் சிறப்பாகக் கடமையாற்றியமையும் பாராட்டத்தக்கவிதத்தில் அமைந்திருந்தன.

கல்விப் பணிப்பாளர் நல்லூர் வட்டாரப் பொருட்காட்சியின் சிறப்பம்சங்களையும், வட்டாரக் கல்வி அதிகாரி, அதிபர், ஆசிரியர், மாணவர்களின் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் வெகுவாகப் பாராட்டினார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி தமது உரையில் இப்பொருட்காட்சிகளின் மூலம் மாணவரின் கருத்து வெளிப்பாடுகளையும், கைத்திறனையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம்அளித்த கல்விப் பணிப்பாளரையும் இப்பொருள்காட்சி சிறப்புற நடாத்த ஒத்துழைப்பளித்த கல்வித் திணைக்கள அதிகாரிவி, ஆசிரியர்கள் அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்களையும்பாராட்டியதோடு தமது நன்றியையும் தெரிவித்துக்கொண்டார்.

## தமிழ்மொழி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் இன்று 14ம் திகதி ஏழாலை உப வட்டாரத்திற்கும் நாளை 15ம் திகதி மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயத்தில் மானிப்பாய் உப வட்டாரத்திறகும் 16ம் திகதி உடுவில் இராமநாதன் கல்லூரியில் உடுவில் உப வட்டாரத்துக்கான போட்டிகள்ளும் இடம்பெறும்.

இம் மாதம் 18ம் திகதி வட்டார ரீதியிலான போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (சி)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 14-10-86

## இலங்கைக்கு அமெரிக்காவின் இராணுவ உதவி

# இந்தியஅரசு தனதுஆட்சேபனையை தெரிவிக்க வேண்டும் - நெடுமாறன்

சென்னை, அக்-13

இலங்கைத் தமிழ்ப் போராளிகளை எதிர்த்துப் போராடுவதற்காக இலங்கை அரசுக்கு அமெரிக்க இராணுவ உதவி கிடைக்குமெனக் கூறப்படும் முயற்சிகளுக்கு இந்திய அரசு தனது ஆட்சேபனையைத் தெரிவிக்கவேண்டுமென்று தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்தலைவர் திரு. பி. நெடுமாறன் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு இந்த இராணுவ உதவி கிடைக்குமேயானால் இந்துமா கடற்பகுதி பாதிக்கப்படுமென்றும், இலங்கைக்குக் கிடைக்கும் எந்தவித இராணுவ உதவியும் இந்துமகா சமுத்திரத்தின் அமைதியைப் பாதிக்குமென்று அப்போது வெளியுறவு அமைச்சராகவிருந்த திரு பி. வி நரசிம்மராவ் பாராளுமன்றத்தில் கூறினார் என்று தெரிவித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு இராணுவ உதவிகள் எதையும் அளிக்காது என்று இந்தியா எமக்கு உறுதிமொழி அளித்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். [ஒ]

## ராணுவம்மீது தாக்குதல்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து மீண்டும் இராணுவத்தினர் வெளியே வந்தபோது போராளிகள் உக்கிரமாகத் தாக்கியதையடுத்து இராணுவம் முகாம் திரும்பியது

இச்சம்பவத்தின்போது பலத்த குண்டுச் சத்தங்களினால் கிளிநொச்சிப்பகுதி கதிகலங்கியது. திருநகர் பகுதியை நோக்கி இராணுவம் வரமுற்பட்டபோது போராளிகள் கோரத் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து முகாம் திரும்பிய இராணுவத்தினர் கிராமங்களை நோக்கி ஷெல் பிரயோகம் மேற்கொண்டனர்.

## இளைஞர் கோஷ்டி நடவடிக்கை

நெல்லியடி, செவ்

நெல்லியடி, கரவெட்டி கரணவாய், துன்னாலை ஆகிய பகுதிகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்கள் மீதும் மதகுகளில் இருந்து அரட்டையடித்துக் கிருப்பவர்கள் மீதும் இளைஞர் கோஷ்டியொன்று கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

மறைந்த

## விடுதலைப்புலிகள் போராளிகளுக்கு ஈ. பி. ஆர். எல். எவ். அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்

''ஈழமக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துபோராடி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விக்டர், ரேரும் ஆகியோரின் இழப்பினால் துயருற்றிருக்கும் புலிகள் இயக்க போராளகளுக்கு எமது ஆறுதல் செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, விரர், ரேரும் ஆகியோரின் மரணத்தை முன்னிட்டு விடுத்துள்ள அஞ்சலிசெய்தியில் தெரிவித்துள்ளது

இச்செய்தியில்மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ''ஈழமக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து போராடி வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் விக்டர், ரேரும் ஆகியோருக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி தனது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது இவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கபோராளிகளுக்கு எமது ஆறுதல் செய்தியை தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்''

இப்புதிய திருப்பம் பொது மக்களுக்கு மிகுந்த ஆறுதலைக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

### தமிழீழ ராணுவம் அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரியுமான தளபதி விக்ரருக்கும் சகதோழர் ரேரூமிற்கும் தமிழீழ ராணுவத்தினர் துண்டுப்பிரசுரம் மூலம் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

அத்துண்டுப் பிரசுரத்தில் மன்னார் பகுதி அடம்பனில் இரவோடிரவாக வெளியேறி மக்களை அழிக்கவிருந்த ஸ்ரீலங்கா கூலிப்படையினரை எதிர்கொண்டு, நேரடிமோதலில், ராணுவ தரப்பில், பலத்த சேதத்தை உருவாக்கியதோடல்லாமல் புதுவகையான யுத்த தந்திரோபாயங்கள் மூலம் பின்னடையச் செய்யும் முயற்சியில் களத்தில் வீரமரணமெய்தியவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வடக்கில் பிரபா - உமா ஆட்சி நடைபெறுகிறது" — விஜயகுமாரணதுங்கா

கொழும்பு, திங்கள்

''இந்த அரசின் நிர்வாகம் அநுராதபுரத்துச்கு அப்பால் இல்லை. பிரபாகரன், உமா மகேஸ்வரன் அரசுதான் வடக்கே ஆட்சிசெய்கின்றது யாழ்ப்பாணத்தில் கோட்டை இராணுவ முகாமிற்கு முன் ஐம்பதுயார் தூரத்தில் உமா மகேஸ்வரனின் முகாம் இருக்கின்றது இராணுவமுகாமிற்கு வருகின்றவாகனங்களை உமா மகேஸ்வரன் முகாமில் இருப்பவர்கள்தான் சோதனையிட வேண்டிய நிலை இன்று வட பகுதியில் உள்ளது''

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க நெபொட நகரமைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. விஜயகுமாரணதுங்க அங்கு தொடர்ந்து பேசுகையில்:-

யாழ் மாவட்டத்தில் இன்று அரசின் சட்டம் இயங்கவில்லை. தமிழ் இயக்கங்கள்தான் சட்டங்களை உருவாக்கி வழக்குகளை விசாரித்து குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு தண்டனை விதிக்கின்றன. ஆனால் நமது பொலிஸார் சட்டங்களை இங்கே மட்டும்தான் அமுல் செய்கின்றனர்'' என்று கூறினர். (வா)

## வவனியா, மன்னாரில் ஊரடங்கு

கொழும்பு, செவ்

வவனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நேற்று பிற்பகல் 2 மணிமுதல் இன்று பிற்பகல் 4 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இவ்விரு மாவட்டங்களிலும் தீவிரவாத நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதனாலேயே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. (ஊ)

## வீரவணக்கமும் அஞ்சலியும்

வல்வெட்டித்துறை. திங்கள்

மன்னார் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும நடைபெற்ற மோதலில் மரணமடைந்த விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் தளபதி விக்ரருக்கு வீரவணக்கங்களும் அஞ்சலியும் செலுத்துமுகமாக வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி நெல்லியடி, பருத்தித்துறை ஆகிய பகுதிகளெங்கும் வீதிகள் தோறும வாழைகளும், தோரணங்களும் கட்டப்பட்டு கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகள் ஆங்காங்கே அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. கடைகளில் பெரும்பாலானவை பூட்டப்பட்டு தெருக்கள் வெறிச்சோடி சோகமயமாகக் காட்சியளிக்கின்றன. [கே]

## இம்மாத ஒய்வூதிய கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், செவ்

இலங்கை வங்கிகச்சேரி கிளையில் ஒய்வூதியம்பெற்று வந்தோருக்குரிய ஒக்டோபர் மாத ஒய்வூதியம் எதிர்வரும் 18ம், 20ம், 21ம் திகதிகளில் கோட்டை கொடுப்பனவுக் கரியாலயத்தில் வழங்கப்படும்.

18ம் திகதி-சிவில், ஆசிரியர் ஒய்வூதியம் பெறுவோருக்கும் 20ம் திகதி விதவைகள் ஒய்வூதியம் பெறுவோருக்கும், 21ம் திகதி ஆசிரியர். விதவைகள், படைக் கலசேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள், ஏனையோருக்கான ஒய்வூதியமும் வழங்கப்படும்


இக்கொடுப்பனவுகள் காலை 9 மணிமுதல் பி. ப 1 மணிவரை வழங்கப்படும். [சி]

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சிவராசா

கொட்டடியைப்பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவராசா (யாழ் கச்சேரி விவாகப் பதிவுக் காரியாலயம்) அவர்கள் காலமாகி விட்டார் அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், மணிவண்ணன், யமுனாவின் அன்புத் தந்தையும் இராமநாதன். காலஞ் சென்ற திருமதி தர்மலிங்கம், கண்மணி, திருமதி கந்தையா அன்னலட்சுமி அவர்களின் அன்புச் சகோதரரும் சேதீஸ்வரநாதன், சேதீஸ்வரதேவி. பாக்கியநாதன் (தொலைத்தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் மைத்துனரும் நாகேஸ்வரி பொன்னம்பலம் அவர்களின் மருமகனும், தங்கம், சாந்தாதேவி ஆகியோரின் சகோதரரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-10-86 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் வடலியடைப்பில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். (C 5195)

### திருமதி அஞ்சலீன் பற்றீசியா அரியம்



திருமதி அஞ்சலீன் பற்றீசியா அரியம் (கச்சேரி யாழ்ப்பாணம், கொழும்பு. நீதி அமைச்சு, உளநாட்டு அலுவல்கள் அமைச்சு, கொழும்பு முன்னாள் உத்தியோகத்தர்) யேசுவினடி சேர்ந்தார். இவர் திரு யோசெப் அரியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற திரு A S அருளானந்தம் (J. P, திருமதி கத்தறீன் அருளானந்தம் அவர்களின் அருமைப் புதல்வியும், அன்ரன். அல்பிறட், அனிக்கிலீற், அஞ்சலோ, ஏட்றியன், அலக்ஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியும். ஈடித், சாமினி, சாந்தி, இமல்டா, சரோ, அன்புமலர், எலிஸபெத் நவரட்ணம் (Teacher), திரு S. நவரட்ணம் (Teacher) இவர்களின் மைத்துனியும், சுஹாசினி, டயானா, ரொமலோ, சண்முகதாசன், மோகன் இவர்களின் மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 79, கதீட்ரல் ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 14-10-86 செவ்வாய்க்கிழமை (இன்று) பிற்பகல் 3-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C-5201]

## மரண அறிவித்தல்

### திரு. M K. மரியதாசன் (குருகுலசிங்கம்)

[இளைப்பாறிய-தொழில்நுட்ப அதிகாரி-செட்டிகுளம்]

எம். கே. மரியதாசன் 12-10-86 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற மேரிரேஸ் திரவியராணி அவர்களின் அன்புக்கணவரும், திருமதி ஷிரூணி ஜேக்கப், நிலாணி [ஆசிரியை யாழ் திருக்குடும்ப கனையர் மடம்], அன்ரன் ராஜ்குமார் [ஜெர்மனி] ஆகியோரின் அன்புத்தந்தையும். ஜோசப் ஜேக்கப் [யாழ் தாதிமார் பயிற்சிக் கல்லூரி] அவர்களின் மாமனாரும், திரு M. ஜேக்கப், காலஞ்சென்ற திருமதிகள் எலிசம், அன்னம்மா பொன்னுக்கண்டு, திரு M L. குணசிங்கம், திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி லூட்ஸ் ஜேக்கப், காலஞ்சென்ற S டேவிட், காலஞ்சென்ற தம்புலாசறஸ் திரு M சிமியாம்பிள்ளை, [கல்வி பணிப்பாளர்], திருமதி ஹெலன் குணசிங்கம், திரு S பிறெட்றிக், திரு J செபஸ்ரியாம்பிள்ளை (U S A). திருமதி அழகுராணி சூசைப்பிள்ளை, திருமதி லூர்த்துராணி அருளானந்தம், திருமதி செல்வராணி அல்போன்சஸ் ஆகியோரின் மைத்துனரும். திருமதி பிரான்சிஸ்கா பிறட்றிக். திரு S சூசைப்பிள்ளை. திரு. R. அருளானந்தம், திருமதி இன்பம் செபஸ்தியாம்பிள்ளை [U S.A.], திரு S அல்போன்சஸ் ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் பூதவுடல் 15-10-86 புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

125, [677] பீச்ரோட்,
யாழ்ப்பாணம்.

[C 5202]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O; Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126